**கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பு - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப் பொறுப்பின் 16(2) மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர நம்பிக்கைப் பொறுப்பின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கைப் பொறுப்பின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிக்கை பொறுப்பினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நம்பிக்கைப் பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு

அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எசல பெரஹரா நம்பிக்கை பொறுப்பிற்குரிய பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படும் ரூபா 20 மில்லியன் நிலையான வைப்பிற்காக ஆண்டின் போது கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,704,139 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் 1,000,000 என ரூபா 704,139 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முழு வட்டிப் பணத்தையும் தருமாறு பொது நம்பிக்கையாளர் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடப்பட்ட போதும் கடந்த சில ஆண்டுகளின் போதும் ரூபா 1,000,000 வீதமே வழங்கப்பட்டிருந்தது. கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் BD/HRD/101/07/3/2014 மற்றும் 2014 நவம்பர் மாத அமைச்சரவை | வட்டி சதவீதத்தின் பிரகாரம் வட்டி கணக்கிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | விஞ்ஞாபனத்தின் பிரகாரம் பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தினால் செலுத்தப்பட்ட தொகை ரூபா 1,000,000 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக அவ்வட்டித் தொகையை எதிர்பார்ப்ப தாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முன்னர் பெரஹர பொறுப்பிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியாக ரூபா 16,217,797 பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தின் கணக்குக ளில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் எசல பெரஹர நம்பிக்கை பொறுப்பினால் அப்பணத்தை செலுத்த வேண்டிய மீதியொன்றாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பின் ரூபா 20 மில்லியன் தொகை நம்பிக்கை பொறுப்பின் பாதுகாப்பு பொறுப்பாளராக செயற்பட்ட நம்பிக்கை பொறுப்பாளரால் பிரமுக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்குரிய வட்டித் தொகை வருடாந்தம் எசல பெரஹரவிற்கு பணமாக வழங்குவது இடம்பெற்றது. எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பினால் அதனை வருடாந்தம் பெரஹரவை நடாத்தும் போது செலவினத்தை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அதனை மீண்டும் பொது நம்பிக்கையாளர் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டியதில்லை என அறிவிக்கின்றேன். | எசல பெரஹர நம்பிக்கை பொறுப்பின் பொறுப்பாளராக பொது நம்பிக்கையாளர் திணைக்களம் இருப்பதால் செலுத்த வேண்டிய தொகை காணப்படுகின்றதா என உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு சட்டம் | | | |
| 8(1) ஆம் பிரிவு | ஶ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே, கண்டி சுற்றுப்புற தேவாலயங்களின் சுற்றுபுற பஸ்நாயக்க நிலமேக்கள், கண்டி நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட | மதியுரைக் குழுவை நியமிக்கும் போது அது எசல பெரஹர நம்பிக்கை பொறுப்பினால் நியமிக்கப்பட வேண்டியதுடன் அதிமேதகு சனாதிபதி அவர்களால் | சட்டத்தின் பிரகாரம் மதியுரை குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயலாளருடன் கூடிய சனாதிபதி அவர்களால் பெயரிடப்படுகின்ற மூன்று அங்கத்தவர்கள் உட்பட மதியுரைக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பெயரிடப்படுகின்ற மூன்று அங்கத்தவர்களும் அதில் உள்ளடக்கப்படுவர். இதுவரை அதற்காக மூன்று பேர் நியமிக்கப்படவில்லை. எனினும் மதியுரைக் குழுவின் தலைவர் பெரஹர நம்பிக்கை பொறுப்பின் கௌரவ தலைவராவர். ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே தாமாக இருப்பதால் உரிய செயற்பாடுகளை இதுவரைத டையின்றி நிறைவேற்றியுள்ளதாக அறிக்கையிடுகின்றேன். | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியின் உள்ளடக்கப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் ----------------------------- | | | |
| i | நி.பி 877(1)(இ) | ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பாதீட்டை முன்னைய ஆண்டின் செப்தம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டு பணிப்பாளருக்கும் அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பித்திருக்கவில்லை. | நம்பிக்கை பொறுப்பு தொடர்பாக வருடாந்த பாதீட்டை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் தேசிய பாதீட்டு பணிப்பாளருக்கும் அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் எசல பெரஹர நம்பிக்கை பொறுப்பு எந்த அமைச்சின் வருவதாக சட்டத்தில் குறிப்பிடப்படாமையால் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதெனவும் எந்தவொரு அமைச்சினாலும் அல்லது திணைக்கள மொன்றினாலும் வருடாந்த நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை ஆதலால் எசல பெரஹர | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நம்பிக்கை பொறுப்பின் வருடாந்த மதிப்பீட்டை எசல பெரஹர நம்பிக்கை பொறுப்பினால் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடுகின்றேன். | |
| ii | நி.பி 877(2)(ஈ) | ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டிற்காக இதுவரை செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்படவில்லையென அறிக்கையிடுவதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் அதற்காக தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிக்கையிடுகின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கு அறிக்கைகள் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

----------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------------

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 516,337 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,757,602 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,241,265 ஆன அதிகரித்திருந்தது. இவ்வாண்டு பெரஹர பொது மக்களுக்கு திறக்கப்படாமை காரணமாக பெரஹர வருமானம் ரூபா 5,390,600 ஆல் குறைவடைந்திருந்ததுடன் பெரஹர செலவினமும் ரூபா 6,699,374 ஆல் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.